9th July 1962]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காகத்தான் மேற்கொண்டு மூன்று என்ஜினியரிங் காலேஜுகள் வைப்பதாக உத்தேசித்திருக்கிறோம்.

* 204 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to open a Regional Engineering College in Tiruchirappalli; and

(*b*) the details of the States for which seats would be allotted in the college?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Preliminary steps like land acquisition, preparation of plans and estimates, etc., have been taken up.

(*b*) The College will have an ultimate intake of 250 seats of which 50 per cent will be for the Madras State, 30 per cent for the other States in the Southern Region and 20 per cent for the other parts of the country.

சுயமரியாதைத் திருமணங்கள்.

* **205 கேள்வி.**—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்க சர்க்கார் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: 1955-ல் முன்னாள் நிதியமைச்சராக இருந்தவர் இந்தச் சட்ட மன்றத்திலே "சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாவதற்குச் சட்டம் கொண்டுவரப் போகிறோம்" என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அகில இந்திய ரீதியிலே ஹிந்து திருமணச் சட்டம் வந்தது. அந்தச் சட்டம் வந்த பிறகும், பழைய முறை தான் அமலில் இருக்கிறது. ஒன்று ரெஜிஸ்தர் பண்ணியோ, அல்லது புரோகிதரை வைத்தோதான் திருமணம் செய்ய முடியும். அதிகமான சுயமரியாதைத் திருமணங்கள் நடக்கின்ற காரணத்தினாலே, இந்த ரிஜிஸ்டர் பண்ணுகிற புரொசீஜரை ஸிம்பிளிபை செய்வதன்மூலம் பொது மக்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களைக் குறைக்கலாம். ஆகவே ரெஜிஸ்டர் பண்ணுகிற அதிகாரத்தை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பிரச்னையை அரசாங்கம் பரிசீலனை செய்ததிலே, இதற்காக ஒரு சட்டம் செய்வதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது புலப்பட்டது. இம்மாதிரி திருமணங்களை ரெஜிஸ்டர் செய்வதற்கு 'ஸ்பெஷல் மேரியேஜ் ஆக்ட்' இருக்கிறது. எவ்வளவோ செலவு செய்து கல்யாணம்

பண்ணினதற்குப் பின்னர் ஸப்-ரெஜிஸ்திராரைப் போய்த் தேடுவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. பஞ்சாயத்துக்கு இந்தப் பளுவைக் கொடுப்பதற்கு அவசியமில்லை. ஏனென்றால் பின்னர் வழக்குகள், சொத்து உரிமை எல்லாப் பிரச்சனைகளும் வருகின்றன. மேலும், சுயமரியாதைத் திருமணங்களைப் பற்றி ஒரு சட்டம் கொண்டு வருவது என்றால் அது 'பிரிஸைஸ்' ஆக இருக்க வேண்டும். தவிர, சுயமரியாதைத் திருமணங்கள், சில பிரசங்கம் செய்து நடக்கின்றன, சில மோதிரம் மாற்றி நடக்கின்றன, சில தாலி கட்டி நடக்கின்றன, சில வேறு வகையிலும் நடக்கின்றன. ஆகவே இதில் எது சுயமரியாதைத் திருமணம் என்று சொல்லுவது கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான், சட்டம் கொண்டுவர முடியாமல் இருக்கிறது.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: சுயமரியாதைத் திருமணங்களில் ஜாதி விட்டு ஜாதியில் கல்யாணம் செய்வதும் ஒன்று என்று தெரிகிறது. அம்மாதிரிக் கல்யாணங்கள் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்குச் சட்டபிரகாரம் தகராறு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படி ஒன்றும் தகராறு இல்லை. ஏதாவது தகராறு இருந்தால் அதைத் திருத்திக் கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசுவாமி அவர்களுக்கும், நம்முடைய கனம் முதலமைச்சர் அவர்களுக்கும், இடையே நிலவிவரும் பரஸ்பர மரியாதை நட்புறவு, இவைகளை நிலை நாட்டும் வகையிலே, எதிர்க்கட்சியிலே இருந்து ஒரு 'நான்-அபிஷியல்' மசோதா கொண்டுவந்தால், லட்சக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்கள் நடக்கிற காரணத்தால், அதைச் சர்க்கார் கட்சி ஆதரிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டம் செய்வதிலே இருக்கிற சிக்கல்களை எடுத்துச் சொன்னேன். எது சுயமரியாதைத் திருமணம் என்பது சொல்லப்படவில்லை. நான் ஏற்கனவே சொல்லியபடி பலவிதமான சுயமரியாதைத் திருமணங்கள் நடக்கின்றன. ஜாதி விட்டு ஜாதி திருமணம் என்று சொன்னால், அது சுயமரியாதைத் திருமணம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். சுயமரியாதைத் திருமணங்கள் ஏராளமாக நடக்கின்றன என்று சொன்னால் அதற்கெல்லாம் சட்டம் செய்வது சரியல்ல. திருமணங்களை ரிஜிஸ்டர் செய்வதற்கு சப்-ரிஜிஸ்டிரார் இருக்கிறார்.

திரு. ஜே. மாதா கவுடர்: தமிழ் நாட்டுப் பெண்களுடைய கழுத்திலே தாலி இருந்தால்தான் கல்யாணமானவர்கள் என்று தமிழர்கள் கருதும்போது, கழுத்திலே தாலி இல்லாமலேயே இருந்தால் அது சுயமரியாதைத் திருமணம் ஆகிவிடும் என்று சொல்லக்கூடியவர்கள் தமிழர்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த ஆராய்ச்சியில் நாம் ஈடுபட வேண்டாம். அது அவர்கள் விருப்பம். தாலியை வைத்துக் கொள்ளட்டும். அல்லது அதை எடுத்துவிடட்டும்.

9th July 1962]

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: தமிழகத்தில் நடக்கும் எல்லாத் திருமணங்களையும் 'ரிஜிஸ்டர்' செய்து கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை. கட்டாய முறை இல்லாமல் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் ரிஜிஸ்டர் செய்துக்கொள்வது நல்லது. ரிஜிஸ்டர் செய்துகொள்வதை நாங்கள் வரவேற்கிறோம்.

திரு. இராம அரங்கண்ணல்: அவ்வாறு ரிஜிஸ்டர் செய்து கொள்ள விரும்பினாலும், வெகு தூரத்திற்கு சென்று பதிவு செய்து கொள்ளவேண்டியிருக்கிறது என்பதை சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்ட நான் என்னுடைய வாழ்க்கையிலே உணர்ந்திருக்கிறேன். ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களிலேயே இந்தத் திருமணங்களைச் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சப்-ரிஜிஸ்டிரார் அருகில்தான் இருப்பார். திருமணம் செய்துகொண்டதும் அங்கே போவதே ஒரு "ஹனி மூன்" டிரிப்பாக இருக்கும். (சிரிப்பு.)

Sugar factories

* 206 *Q.*—SRI V. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are negotiating with any private concerns for the establishment of any sugar factories in the State; and

(*b*) if so, their capacity and the places where they are to be located?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கவர்னர் அவர்கள் உரையிலே தனிப்பட்டவர்கள் மூன்று சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களோடு அரசாங்கம் கலந்து ஆலோசித்து வருகிறது என்றும் அந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நான் கேள்வி கேட்டபொழுது, அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். இதில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். கேள்வி என்னவென்றால் "Whether the Government are negotiating with any private concerns for the establishment of any Sugar factories". இதில் அரசாங்கம் ஒன்றும் நெகோஷியேட் பண்ண வேண்டிய அவசியமில்லை. தனியார் மூன்று பேர், மூன்று கம்பெனிகள் வைக்கப் போகிறார்கள். அவர்களுக்கு லைசென்சு வழங்கியிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS